2021 பிப்ரவரி 5] [திரு. இரா. குமரகுரு]

அண்ணன் அவர்களின் தலைமையிலும் பணியாற்றுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சிகளின் சதிச் செயல்களை முறியடிக்க, அவர்களது பிரச்சார மழைகளுக்கு கைக்குடையாய் இருந்து எங்களை மட்டுமல்ல, மக்களையும் காக்கும் மகத்தான கடமையைச் செய்யும் தமிழக மக்களின் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியினை, அடுத்த முறையும் இம்மண்ணிலே அமைத்து, வெற்றிப் பரிசாக மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடத்திலே, அவரின் பாதச்சுவடுகளில் வைப்போம் என உறுதியோடு கூறி, சூளுரைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விதி 110—ன்கீழ் அறிக்கை

கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை தள்ளுபடி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து”

என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி. உழவுத் தொழிலன்றி பிற தொழில்களைச் செய்யும் அனைவரையும் உழவர்களே தாங்குவதால் அவர்களே இந்த உலகத்திற்கே அச்சாணி போன்றவர்கள். ஒரு நாட்டின் வளம், அந்த நாட்டின் விவசாயத்தைப் பொறுத்தே அமையும். அதனால்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மை உள்ளிட்ட முதன்மைத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, பல திட்டங்களைத் தீட்டி, அதனைச் செயல்படுத்த அதிக நிதி ஒதுக்கீடும் வழங்கினார்கள். அந்த வழியை வழுவாமல்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2021 பிப்ரவரி 5

பின்பற்றும் எனது தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் வேளாண் பெருமக்களின் நலன் பேணவும், வேளாண்மை செழிக்கவும் பல திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

பிற்பகல் 12–15

குடிமராமத்து மற்றும் பல்வேறு நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் சிறப்பான நீர் மேலாண்மைத் திட்டங்கள், வேளாண் தொழில் செழிக்க நுண்ணீர்ப் பாசனம், ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப் பண்ணையம், வேளாண் விற்பனை மையங்கள் மேம்பாடு, காய்கறி, பழங்கள் சாகுபடியை ஊக்குவிக்க சந்தை தொடர் கட்டமைப்புத் திட்டம், உயர் தொழில்நுட்ப சாகுபடி, பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என பல்வேறு திட்டங்கள் எனது தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை பராமரிப்பு, மீன் வளம் போன்ற துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கால்நடைத் துறையின் பங்கும் அதிகரித்து வருகிறது.

விவசாயிகளுக்குத் துயரம் ஏற்படும்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உதவிக்கரம் நீட்டி, அவர்களைக் காப்பதில் முன்னிலையில் இருந்து வருகிறது. அதனால்தான் 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், 31–3–2016 வரை நிலுவையில் இருந்த 5,318.73 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தார்கள். இதனால், 12.02 இலட்சம் குறு, சிறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக இழப்பைச் சந்தித்த விவசாயப் பெருமக்களுக்கு, 2,247 கோடி ரூபாய் வறட்சி நிவாரணத் தொகையாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியது. இதைத் தொடர்ந்து, விவசாயிகளின் வாழ்வு செழிக்க பல்வேறு நலத் திட்டங்களும், வேளாண் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களும் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 2019–2020 ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றின் காரணமாக உலக நாடுகள் பலவும் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. தமிழ்நாட்டிலும் இதன் தாக்கம் இருந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியது. இந்நிலையில், விவசாயமும் பாதிப்புக்கு உள்ளாகியதுடன், தொடர்ந்து ஏற்பட்ட 'நிவர்' மற்றும் 'புரெவி' போன்ற புயல்களும், அதைத் தொடர்ந்து சென்ற மாதம் பருவம் தவறி பெய்த கடும் மழையும் பெருத்த பயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியதால், கடன் பெற்று பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் பெரும் அல்லலுக்கு உள்ளாகினர். இந்தப் பேரிடர், அறுவடைகளுக்குத் தயாராக இருந்த நெல், கரும்பு, வாழை தோட்டப் பயிர்களை மட்டுமல்லாது, மானாவாரிப் பயிர்களையும் பெருமளவில் சேதப்படுத்தியது.

வேளாண் பெருமக்களின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மத்திய அரசின் நிதி விடுவிப்பையும் எதிர்பாராமல், சாகுபடி செய்த பயிர்களுக்கான இடுபொருள் உதவித் தொகை 1,717 கோடி ரூபாயை 16.43 இலட்சம் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க உத்தரவிட்டு, அந்தத் தொகையும் நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இடுபொருள் உதவித் தொகையானது, விவசாயிகளின் துயரைத் துடைத்தாலும், அவர்கள் மீண்டும் பயிர்த் தொழிலைத் தொடர உதவ வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எண்ணியது. மேலும், விவசாயிகள், பல்வேறு விவசாயச் சங்கங்கள் சாகுபடி பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பெருத்த சேதத்தைக் கருத்தில்கொண்டு, நிலுவையிலுள்ள பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

கீழே விழுந்தவர்களை மேலே தூக்கி விட்டால் மட்டும் போதாது, அவர்கள் மேலும் வலுப்பெற உதவி செய்திட வேண்டுமென்ற உயரிய சிந்தனையில், எனது தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகின்றது. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, தற்போதுள்ள சூழ்நிலையைக்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2021 பிப்ரவரி 5*

கருத்தில்கொண்டு, கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—20

அதிகமாக நேசிப்பவனே அதிகமாக உதவி செய்பவன். நானும் ஒரு விவசாயி; விவசாயிகளை அதிகமாக நேசிப்பவன்; வேளாண் பெருங்குடி மக்களின் இன்னல்களைத் தீர்ப்பதே என்னுடைய முதல் கடமை என்னும் நிலையில் இருந்து எடுக்கப்பட்டுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடவடிக்கையினால் பயிர்க் கடன் நிலுவையில் வைத்துள்ள 16.43 இலட்சம் வேளாண் பெருமக்களும் எந்தவிதமான சிரமமுமின்றி, வரும் ஆண்டில் பயிர் சாகுபடியைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போதும், நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் அளிப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வாக்குறுதி அளித்தனர். அவ்வாக்குறுதியை அவர்களால் நிறைவேற்றவே முடியவில்லை என்பது தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை. அதேபோன்று, 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் பொதுத் தேர்தலின்போதும் நாங்கள் வெற்றிபெற்று வந்தவுடன் விவசாயிகள், கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய பயிர்க் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு வாக்குறுதி அளித்தார். நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கட்சி கூட்டணி சேர்ந்து 38 இடங்களில் வெற்றி பெற்றது. வெற்றி பெற்றவுடன் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்தார்கள். இதுதான் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் கடைபிடிக்கும் வாடிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தலின்போது அளிக்கப்படும் வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரே அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் சொல்வதைச் செய்வோம்; செய்வதை மட்டுமே சொல்வோம்; சொல்லாத பிற நன்மைகளையும் செய்வோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவின்

2021 பிப்ரவரி 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அரசு தற்போது பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல் அரசாணையையும் வெளியிட்டு, அதற்கான நிதி ஆதாரத்தையும் வருகின்ற நிதிநிலை அறிக்கையிலேயே ஏற்படுத்த உள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்வதுடன் இந்த அறிவிப்பு உடனடியாகச் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்து அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

6. கூட்டுறவுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில், உழவர் பெருமக்களுக்காக, வேளாண்குடி பெருமக்களுக்காக, வேளாண்குடி மக்களின் துன்பத்தை, துயரத்தை, கண்ணீரைத் துடைப்பதற்காக பாடுபட்டுவரும் அரசு நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. நாடு முழுவதும் இருக்கின்ற, கோடிக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்கள் எப்படி நம்முடைய தலைவர் பெருமக்களை, நம்முடைய அரசை, கட்சியை நேசித்தார்களோ, நம்பினார்களோ, அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுகின்ற வகையில், புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் கண்ட கனவை நனவாக்கியவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் ஐயா அவர்கள். மக்கள் நலன் ஒன்றே இலக்கு என்று தொடர்ந்து, நாளெல்லாம் சோர்வின்றி, ஓய்வின்றி, உழைத்து வருகின்ற ஓர் அதிசயமான முதல்வர் நம்முடைய முதல்வர் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைத் துறையிலே இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடைமுறைப்படுத்திராத அளவிற்கு ஏற்கெனவே எண்ணற்ற திட்டங்களை வரிசைப்படுத்தித் தந்திருக்கிறது நம்முடைய அம்மாவின் அரசு. வேளாண் பெருங்குடி மக்களுக்கான எல்லா உதவிகளையும் திட்டங்களாகத் தந்தும், ஏற்கெனவே ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை, அது புயல் என்றாலும், மழை என்றாலும், வெள்ளம் என்றாலும், வறட்சி என்றாலும், நிவாரணமாக அள்ளித் தந்தும், அவர்களுக்கு எந்த இழப்பும் வராமல், குழந்தையை தாய் காப்பதுபோல், குஞ்சை தாய்